**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No.52/2022**

திருமதி. தங்கமணி (P.W. –1) **03.04.2025**

**<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி.</u>**

ஏற்கனவே என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுடள்ளது. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. ஆகையால் மனு தாக்கல் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி அனுமதிக்கப்பட்டுள்ளதால் கீழ்கண்ட ஆவணங்களை வாதி தரப்பில் குறியீடு செய்யவேண்டும்.

1. 31.3.1999 – ராஜன் வகையறா பெயரில் உள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ– 1**

2. 12.12.2005 – ராஜன் மற்றும் குமார் இடையே ஏற்பட்ட பாக சாசன பத்திரம் – சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ– 2**

3. 14.6.2007 – வாதி பெயரில் உள்ள தானசெட்டில் மெண்ட் பத்திரம் – சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ– 3** (சாட்சி அசல் பத்திரத்தை பொறுத்து சாட்சியம் அளிக்க மறுத்துள்ளார். ஆகையால் பாரதிய சாட்சிய ஆபிநயத்தின்படி ஏற்க்கொள்ளக்கூடிய ஆவணமா என்பதை தீர்ப்புரையின் போது முடிவு செய்யும்)

4. 13.5.2015 – 2ம் பிரதிவாதி சி.எஸ். சுப்பிரமணியம் பெயரில் உள்ள கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ– 4**

5. 4.2.2022 – 1.1.1999 முதல் 3.2.2022 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் – அசல் – **வா.சா.ஆ– 5**

6. 14.8.2018 – 3ம் பிரதிவாதி இளங்கோ பெயரில் உள்ள கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ– 6**

7. 9.2.2022 – வாதி திருப்பூர் மாநகர காவல் ஆணையாளரிடம் கொடுத்த புகார் அஞ்சலக ரசீதுடன் – **வா.சா.ஆ– 7** – நகல்

8. 10.2.2022 – புகார் சார்வானதற்கான அத்தாட்சி – 2 எண்ணிக்கை – **வா.சா.ஆ– 8**

9. 30.5.2017 – திருப்பூர் வடக்கு நெருபேரிச்சல் கிராமம் சர்வே எண். 502/4 பட்டா எண். 2553 க்குரிய சிட்டா – கணினி நகல் – **வா.சா.ஆ– 9**

10. 30.5.2017 – திருப்பூர் வடக்கு நெருபேரிச்சல் கிராமம் சர்வே எண். 502/4 க்குரிய அ பதிவேடு – கணினி நகல் – **வா.சா.ஆ– 10**

11. 7.2.2022 – 1.1.2015 முதல் 6.2.2022 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் – அசல் – **வா.சா.ஆ– 11**

12. 4.9.2018 – மூர்த்தி, ராஜன் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் – சான்றிட்ட நகல் – **வா.சா.ஆ– 12**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.03 19:01:27 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.